


# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 தை 7 (20-1-74) | இதழ்: 28


★

உள்ளே......


முடியும்; முயன்றால்!
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

நீங்காத நினைவுகள்
(கட்டுரை)

★

புதுப் பண்ணையார்
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## அடக்குகின்றாரே...!

(ஆத்தூர். கவிஞர். பன்னீர்ச்செல்வன்)

தமிழரென்று சொல்லிவிட்டால்
தடையும் தோன்றுமா?—அந்தத்
தடைபுரிவோர் செயல்களெல்லாம்
தரணி போற்றுமா?

இலங்கைவாழும் தமிழர்க்கு
இன்னல் வந்ததேன்?—அந்த
இன்னலிலே சாவதுதான்
இறுதி கட்டமா?

அடிமைபோல தமிழர்களை
அடக்கு கின்றாரே!—அந்த
அவலநிலை கண்டுநாமும்
துடிக்க வில்லையே!

தமிழருக்கோர் துன்பமென்றால்
தாவி நின்றோமே!—இன்று
தமிழருண்ட கொடுமைதன்னை
தாங்கு கின்றோமே!

உணர்வுகளே தமிழரென்றால்
ஒன்று கேளுங்கள்!—அங்கே
உணவின்றி சாவோருக்கு
உரிமை வேண்டுங்கள்!

பண்டார நாயகிக்குப்
பண்பை ஊட்டுங்கள்!—கொடுஞ்
சண்டாளப் பாவிகளின்
செயலை மாற்றுங்கள்!

★


விலை: 0-25 காசு

# நீங்காத நினைவுகள்

இராம. அரங்கண்ணல்
குடிசைப்பகுதி மாற்றுவாரியத் தலைவர்

“ஓ கல்கட்டா!” என்றொரு நாடகம் பார்க்க இலண்டனில் நண்பர்கள் என்னை அழைத்தார்கள். ஆடவன் ஒருவனும் அழகி ஒருத்தியும் ‘பிறந்த மேனி’யாக நாடகத்தில் தோன்றுவார்களாம். அவனும் அவளும் ஆடை ஏதுமின்றிக் கட்டிலின் மேலே படுக்கையில்... அதுதான் ‘கிளைமாக்ஸ்’ காட்சியாம். செச்செச்சே! என்றேன் நான். என்னோடு வந்திருந்த நடிகர் ஜெமினி கணேசனுக்குக் கொஞ்சம் சபலம். [1970–ல் நான் தயாரித்த ‘பூவா தலையா’ படம், ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் நடந்த ஆசியத் திரைப்பட விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தது. தயாரிப்பாளனான நானும், படத்தில் நடித்த ஜெமினி கணேசனும் அழைப்பை ஏற்றுச் சென்றிருந்தோம். அந்த வாய்ப்பில் ஐரோப்பிய நாடுகளையும் கண்டோம்.] இப்படியொரு நாடகமா! இது ஆண்டுக்கணக்கில் நடக்கிறதாம்! இங்கிலாந்து அளித்துள்ள சுதந்திரமே சுதந்திரம்! என்று வியந்தேன், நான். ஜெமினியையும் அழைத்துக்கொண்டு ‘ராயல் கோர்ட் தியேட்டர்’ என்னும் நாடக அரங்கில் நடந்த பெர்னட்ஷாவின் ‘விடோயர்ஸ் ஹவுஸ்’ எனும் அருமையான விரசம் இல்லாத நாடகத்துக்குப் போனோம். பூமிக்கு அடியில் நாடக அரங்கம். மேலே வட்டவடிவில் இரண்டு அடுக்கு மாடிகள். ஒரே ஒரு கருப்பு ‘ஸ்கிரீன்’ வெறும் ‘பிளைவுட்’டில் மரங்கள், செடிகள், கதவுகள், காட்சிக்கேற்ற ஒளி அமைப்பு. வசனங்களைப் பேசி அவர்கள் நடித்தது, ஆகா! அற்புதம். அசிங்கம்! அங்கேயே விரசமில்லாத அற்புதம்! மனித இனம் ‘கவர்ச்சி’யைத்தான் நாடுகிறது. ‘ஓ! கல்கட்டா,’ இன்றும் நடந்து கொண்டிருக்கிறதாம், வெளிநாட்டிலிருந்து பலர் அந்த நாடகத்தைப் பார்க்கவே இலண்டனுக்குச் சுற்றுலா வருகிறார்களாம்!

சுற்றுலா செல்வோருக்கு என்று வசதியான ஓட்டல்கள் உண்டு. நான் தங்கியிருந்த ‘ஹைட் பார்க்’ ஓட்டலில், இரவு 4 மணியிருக்கும். என் அறைக்குப் பக்கத்து அறையில் தங்கியிருந்த யாரோ ஒருவர் சிகரெட் பிடித்தபடியே தூங்கிப்போயிருக்கிறார். படுக்கையெரிந்து, தீ, ஓட்டலில் பரவிவிட்டது. நாங்கள் மாட்டிக்கொண்டோம். ஆனால் தீப்பிடித்த சில வினாடிகளுக்கெல்லாம் ‘கிங்கரர்கள்’ போல் தீயணைக்கும் படையினர் வந்து விட்டார்கள். எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தார்கள்? என்று கேட்டேன். பல ஓட்டல்களின் தாழ்வாரங்களும் மரத்தாலானவையானதால் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடுமென்றும், அதையெண்ணி ஒவ்வொரு ஓட்டலிலும் பக்கத்திலுள்ள தீயணைப்பு நிலையத்துக்கு ஒரு ‘கனெக்ஷன்’ உண்டென்றும், விபத்து ஏற்பட்டதும் மணியடிக்குமென்றும் தீ விபத்து உடனடியாகத் தவிர்க்கப்படுமென்றும் சொன்னார்கள். நல்ல ஏற்பாடு! இலண்டனில் நான் பார்த்த பல இடங்களில் ‘வெஸ்ட்மினிஸ்டர்’ அபேயும் ஒன்று. இங்குதான் முடிசூடும் விழா நடக்குமாம். அருகே பாராளுமன்றக் கட்டடம் இருக்கிறது. வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இங்கிலாந்தின் புகழைப் பெருக்கிய எல்லாருக்கும் நினைவுக் கல்பதிக்கப்பட்டிருக்கிறது. ஒருகல் என்னைக் கவர்ந்தது. 1958-ல் பிரிட்டிஷ் அரசியார் திறந்து வைத்த அந்தக் கல்லில் எழுதப்பட்டிருப்பது.

Here are Commemorated the Civil Services of the Crown of India.

Let them not be forgotten,
for they Served India well.

இந்தியாவுக்கு உழைத்த வெள்ளை அதிகாரிகளுடைய சேவைகளைப் பாராட்டும் கல். ‘அபே’யின் உள் கூடத்தில் நம்முடைய திருச்சிராப்பள்ளிக் கோட்டையின் ‘மாடலை’க் கண்டேன்! பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருச்சிக் கோட்டையின் கம்பீரத்தைக் கண்டு வியந்து ‘மாடல்’ செய்து அங்கே வைத்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ‘தாஜ்மகாலை’ மட்டும் பார்த்துவிட்டுச் செல்லாமல், நம் கோட்டைகளையும் பார்க்க விளம்பரம் செய்யவேண்டும்! இலண்டனிலுள்ள இந்திய சுற்றுலா—தகவல் நிலையம் சென்று ‘தமிழ்நாடு’ பற்றிக் கேட்டேன். ஒரு படமும் அப்போதில்லை.

பிராங்க்பர்ட் நகர விமானத் தளத்துக்கு நம்மூர் நண்பர்கள் வந்திருந்தார்கள் வரவேற்க. “ஏசியன் ரெஸ்டாரெண்டு” என்னும் பெயரைப் பார்த்து அங்குச் சென்றோம். சீனர்களின் ஓட்டல் அது! பெர்லின் நகரிலும் பெயரைக் கண்டு உள்ளே போய்ப் பார்த்தால் சீனர்கள். பிராங்க்பர்ட் நகரத் திரைப்பட விழாவில் மேற்கு ஜெர்மனி கலாச்சார அமைச்சரும் நகர மேயரும் எங்களை வரவேற்றுப் பேசினார்கள். விருந்தும் கொடுத்தார்கள். இரவில் அந்த ஒப்பற்ற நகரின் வீதிகளில் நடந்து சென்றோம். ஒரு திகைப்பு! ஒரு கடையின் பெயர் “ANNA‘S Store.“ அண்ணாவின் பெயரில் ஒரு கடையா? என்று நண்பர்களைக் கேட்டேன். நம்முடைய அண்ணாவைக் குறிப்பதில்லையென்றாலும் இரவு நேரங்களில் சாமான்கள் வாங்கச் செய்து வைத்திருந்த ஏற்பாடு

[4-ஆம் பக்கம் பார்க்க]



**காஞ்சி** வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 20—1—74 | இதழ் 28


**யாழ்ப்பாணத்தில்**

**நடந்த**

**நான்காவது உலகத்**

**தமிழ் மாநாட்டின்**

**இறுதி நாளில்**

**இலங்கைக்**

**காவல் துறையினரின்**

**கொடிய**

**அடக்குமுறைக்கும்**

**தடியடிக்கும்**

**பலியான**

**ஈழத் தமிழர்க்கு**

**எம் இதய அஞ்சலி!**

★★★★★★★★★★★★★★★★★★★★

# சிறுமையினைப் புதைப்போம்! செந்தமிழைக் காப்போம்!!

**(கவிஞர். மணிவேந்தன்)**

தூற்றலினுல் தாய்த்தமிழும் அழியும் என்ற
துணிவோடு கிளம்புகிறுர்; விரும்பி இன்று
வேற்றுமொழிச் சொற்களுடன் எழுதுகின்றுர்
வேரற்ற மரம்போல விழுந்து செத்த
ஏற்றமிலா வடமொழியைத் தூக்கித் தோளில்
எடுத்துவைத்தே ஆடுகின்றுர்; ஆடும்போதும்
சாற்றுகிறுர் தமிழ்த்தாய்க்குப் பிறந்தோம் என்றே
சதிசெய்யும் கூட்டத்தார் தெரிந்து கொள்வாய்!

செந்தமிழில் பயிலுவதைத் தடுத்து விட்டால்
சிதைந்துவிடும் தமிழ்வளர்ச்சி என்றே எண்ணிப்
பைந்தமிழை பயிற்றுமொழி என்போர் தம்மை
பச்சோந்திக் கும்பலொன்று சாடக் காண்பாய்!
வந்தமொழி வடமொழிக்கு வால்பி டிப்போர்
வண்டமிழை இகழ்ந்திடவே வாழு கின்றுர்!
எந்தமிழா! இனியும்நீ தூங்க வேண்டா
எழுந்தேநீ இழிசெயலைத் தடுப்பாய் இன்றே!

ஆழ்கடலே பொங்கிவரும் நிலையைக் கண்டும்
அஞ்சாத தமிழ்மறவர் வழியில் வந்தோர்
தாழ்வடைந்து போவதுவோ? அவர்கள் பேசும்
தனித்தமிழும் சாவதுவோ? வரலாற் றேட்டில்
வாழ்விழந்து மாய்வதுவோ? தமிழர் என்றும்
வாகையற்றுத் திரிவதுவோ? என்றன் தோழா?
சூழ்ச்சியினை முறியடித்து வெல்வோம் என்னும்
சூளுரையை மேற்கொள்வாய்! தமிழைக்
காப்பாய்!

ஆற்றலினுல் அழியாது நிலைத்து நிற்கும்
அருந்தமிழைத் தாய்மொழியாய்ப்
பெற்றுேம்; இன்று
போற்றியதைக் காத்தல்நம் கடமை யன்றே?
பூவுலகில் அதைமறந்தால் மடமை யன்றே?
காற்றெனவே நமதுயிரைக் காத்து நிற்கும்
கனித்தமிழை உயிர்த்தமிழை இகழ்வோர்
தம்மை
சீற்றமுடன் நீஎதிர்த்துச் சிதைக்க வேண்டும்;
சிறுமையினை மண்ணுக்குள் புதைக்க வேண்டும்!

★★★★★★★★★★★★★★★★★★★★

[2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

எங்களைக் கவர்ந்தது. பூட்டப்பட்டு, கண்ணாடிச் சன்னல்கள் பொருத்தப்பட்டுள்ள அந்தக் கடையில் சாமான்கள் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன —'டிரேக்'களில்! கீழே விலையும், நம்பர் ஒன்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடையின் ஓரத்தில் டெலிபோன் பெட்டி போல ஒன்று! சிகரெட்டோ, சாக்லெட்டோ அல்லது எந்தப் பொருள் தேவையோ அந்தச் சாமானின் நம்பரை டெலிபோனில் 'டயல் செய்துவிட்டு, குறிப்பிட்ட பெட்டியில் காசைப் போட்டு விட்டால், ஒரு மிசின் நேரே பொருளிருக்கும் இடத்துக்குப் போய் அதனை எடுத்து ஒரு தட்டில் வைக்க, கண்ணாடிச் சன்னலுக்கு வெளியே இருக்கும் தட்டில் அப்பொருள் வந்து விழுகிறது! இலண்டன் சினிமாக் கொட்டகைகளில் காசு போட்டால் காப்பி கொடுக்கும் இயந்திரங்கள் உள்ளன. பிராங்க்பர்ட் கடைத்தெருவில் சில மூலைகளில் நம்மூரில் எடை பார்க்க இருக்கும் இயந்திரப் பெட்டிகள் போல வைக்கப்பட்டுள்ளன. அங்கே போய்க் காசைப் போட்டால் 'கர்ப்பத் தடை' (நிரோத் போன்றவை)க்கான சாதனம் கிடைக்குமாம்! பிராங்க்பர்ட்டில் என் சென்னை நண்பரின் மகள் குர்னுவும் அவர் கணவர் பிரீதமும் எங்களை ரைன் நதிப் பள்ளத்தாக்குக்குத் தங்கள் காரில் அழைத்துச் சென்றார்கள். இருநூறு மைல்கள் சென்றோம். இரு புறமும் மலைகள்—மலை உச்சிகளில் கோட்டை போல் மாளிகைகள்! மேலே விமானங்கள் பறந்தபடி...கீழே ஒரு பக்கம் ரயில்...அருகே ரோடு...நதியில் கப்பல்கள்...ஒரு பக்கம் போலவே ரைன் நதியின் இன்னொரு பக்கமும் இப்படி. சிறுவயதில் பள்ளியில் படித்த 'ரைன் நதிப் பள்ளத்தாக்கு' ஒப்பற்ற உல்லாசம் தருகிறது. பகராக் என்னும் சிற்றூரில் நதியின் கரையில் அமர்ந்து கொண்டு வந்தவைகளை உண்டோம், எதிரே ஆற்றின் நடுவில் ஒரு பழைய கோட்டை. ஹிட்லர், அங்குத்தான், கைதிகளைக் கொண்டுவந்து வைப்பானாம். கை கழுவ ரைன் நதியைத் தொட்டேன்! அப்பாடா!

பெர்லின் விமான தளத்துக்கு வெளிவே வந்து பார்த்தபோது நமது மதுரையின் கவனம் வந்தது. போரால் இடிந்த பலகட்டடங்கள்! அவைகளைப்புதுப்பிக்கும் அவசரம்' கட்டடம் கட்டும் வேகத்தைப் பார்த்தேன். தயாரிக்கப்பட்ட சுவர்களை, இயந்திரம் மூலம் அடுக்கி அடுக்கி பல அடுக்கு மாடி வீடுகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நடுவில், போரால் நாசமான ஒரு மாதா கோயில். போரின் பயங்கரம் புரியட்டும் என்று அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். காடுகளும் ஏரிகளும் நிரம்பிய அழகூர் இரண்டாக்கப்பட்டு இரும்பு முள்வேலி போட்டுத் தடுக்கப்பட்டிருக்கிறது. கீழ்ப் பகுதி ரஷ்யாவுக்கு. இன்னொன்று அமெரிக்காப் பக்கம். கிழக்குப் பகுதியைப் பார்க்க ஒருமேடை போட்டிருக்கிறார்கள், இரண்டு பர்லாங்குக்கு இடைவெளி விட்டு. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டு மடிந்த இடத்தைக் கிழக்குப் பகுதியில் காட்டினார்கள். பெரிய புல்மேடாக யிருக்கிறது. உலகையே கலக்கிய ஹிட்டலர்! புல்மேடு! பெர்லின் நகருக்குள் ரஷ்யப் படை நுழைந்த இடத்தில் ஒரு பெரிய வீரச் சின்னம் எழுப்பியிருக்கிறார்கள். முதலில் நுழைந்த 3 டாங்கிகள் காட்சிப் பொருளாக இருக்கின்றன.

மேற்கு பெர்லின் வேலியைத் தாண்டி அனுமதி பெற்றுக் கிழக்கு பெர்லின் வந்தோம். அங்கு வந்து தான் நாங்கள் செக்கோஸ்லோவேகியாவுக்குப் போக வேண்டும். செக்கோஸ்லோவேகியா ஒரு கம்யூனிஸ்ட் நாடு! பலத்த சோதனைகள். விமான தளத்துக்கு வந்தோம். குடிக்கத் தண்ணீரில்லை. ஜெர்மனியில் 'பீரை' விடத் தண்ணீருக்குத்தான் விலை அதிகம்! ஓட்டல்களில், 'கொஞ்சம் தண்ணீர் கொடு!' என்றால் "தண்ணீர்?" என்று வியப்போடு கேட்பார்கள். கிழக்கு பெர்லின் விமான தளத்தில் மேற்கில் உள்ளது போல அலையோசை இல்லை. ஆழ்ந்த அமைதி. 'செக்' நாட்டின் தலை நகரமான பிராகாவில் இறங்கினோம். மேற்கத்திய நாடுகளைப் போலப் பரபரப்பு இல்லை. நல்ல அமைதி. 'இன்டர் கான்டினென்டல்' என்னும் பிரம்மாண்டமான ஓட்டல். மாவீரன் ஸ்டாலின் காலத்தில் கட்டப்பட்டதாம். அறைகள் எல்லாம் 'சமதர்ம வழியில்' ஓர் ஆளுக்குப் 'போதுமானதாக' இருந்தது.

யூத மக்களைப் போட்டு நாஜிகள் கொன்ற இடங்கள்!......அப்பப்பா, பயங்கரம். பிராகாவிலிருந்து நூறு மைல் தொலைவில் கார்லோவி—வாரி எனும் கண்கவர் ஊருள்ளது. அங்கே ரஷ்ய மன்னன் ஜார் கட்டிய 'பார்க் ஓட்டல்' என்னும் அழகிய மாளிகையுள்ளது. இந்த ஊரில் சுமார் 40 வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. அவைகளிலிருந்து வழிந்த நீர் வெந்நீர் ஆறாகவே ஓடுகிறது! பூமியிலிருந்து பீய்ச்சி அடிக்கும் வெந்நீரைப் பருகினால் குடலிலுள்ள எல்லா வியாதிகளும் குணமடைகிறதாம். விடாமல் பல நீரூற்றுக்களிலும் நீர் பருகினோம். சுடு நீரை மொண்டு குடிக்க அழகான பீங்கான் டம்ளர்கள் விற்கிறார்கள். ஐரோப்பாவிலேயே அருமையான சுகம் தரும் ஊர் இது! ஏராளமான சுற்றுலாவாசிகள். ஊர் அழகாகப் பராமரிக்கப் படுகிறது. "இருப்புத் திரை"க் குட்பட்ட நாடாதலால் யாரும் எளிதில் வந்துவிட முடியாது. ஆனால், வெள்ளையரின் நாணயமான 'பவுனுக்கும்; அமெரிக்கரின் நாணயமான டாலருக்கும்' நல்ல கிராக்கியிருக்கிறது. இரவில் ஒரு நடனம் பார்க்கச் சென்றோம். கம்யூனிச நாடானாலும் சரி, முதலாளித்துவ நாடுகளானாலும் சரி, 'இரவு நடனங்கள்' மட்டும் எங்கேயும் ஒன்றுதான்!

டிராம்கள் ஓடுகின்றன. பிரயாணிகளைக் கண்டக்டர் நம்புகிறார். யாரும் ஏமாற்றுவது இல்லை. கார்கள் எல்லாரும் வைத்துக் கொள்ளவில்லை. 'ரிப்பேர்' வந்தால் அபாரப் பணம் செலவிட வேண்டுமாம்! வரியும் அதிகம்!! எல்லாரும் பொது வாகனங்களை உபயோகிக்க வேண்டும் என்பதால், தனியாகக் கார் வைத்துக்கொள்ளும் ஆசையை வரிப்போட்டுக் குறைக்கிறார்களாம். இதே போலத் தனியார் வீடு வைத்துக் கொள்ளும் சுபாவத்தையும் குறைத்து வருகிறார்கள்! அரசினர் கட்டிடும் மாடிக் குடியிருப்புகளுக்கு நியாயமான வாடகை. யாராவது சொந்த வீடு வைத்துக் கொண்டால் அனுமதிக்கிறார்கள். இரண்டு குடியிருப்பு வீடுகளை ஒருவர் வைத்துக் கொள்ளலாம். ஆனால் வரிகள் எக்கச் சக்கம். ஏன் சொந்த வீடு வைத்துக்கொள்ளப் போகிறார்கள்? வாடகை வீடே மேல் என்கிற எண்ணம் எல்லாருக்கும் வராமலா போகும்? மருத்துவச் சிகிச்சைக்குப்

[13-ஆம் பக்கம் பார்க்க]

# தம்பிக்கு மடல்



## தம்பி,

பஞ்சமும் பட்டனிச்சாவும், பற்றுக்குறையும் அகவிலையும், கிளர்ச்சியும் கலவரமும், அடக்குமுறையும் வன்முறைச் செயல்களும், மிரட்டிக் கொண்டிருக்கக் காண்கின்றோம். சமூகம் முழுவதிலும் ஓர் சலிப்புணர்ச்சி கப்பிக்கொண்டிருப்பது விளக்கமாகத் தெரிகிறது. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம், ஆளவந்தார்களின் திறமைக் குறைவும் ஆணவப் போக்குமே காரணம் என்று நடுநிலையாளர் பலர் கருத்தறிவித்துள்ளனர்.

மோசமாகிக்கொண்டு வரும் நிலைமையைக் கண்டு திகைத்துப்போன நிலையில் காங்கிரசின் பெருந்தலைவர்கள், நடைமுறைக்கு ஒத்துவரவே முடியாத யோசனைகளை வழங்கிக்கொண்டு, செயல் மறந்துகிடந்திடக் காண்கின்றோம். எங்கே பார்ப்பினும் ஓர் ஏமாற்றம்! எரிச்சல்! விட்டேனுபார்! என்ற வீராவேசம்! வீழ்ந்துபடுவதாயினும் நான் எண்ணியதைச் சந்தித்தே தீருவேன் என்ற சூளுரை! கடை அடைப்புகள்! ரயில் நிறுத்தங்கள்! தீயிடல்! இடித்திடல்! தகர்த்திடல்! இவைகளைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடுகள்!—எந்த ஒரு நாகரீக அரசும் சகித்துக்கொள்ள முடியாதன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொறுப்புள்ள எந்த அரசியல் கட்சியாயினும் இந்த நிலைமையை, வன்முறையை ஆதரிக்கலாமா? கண்டித்திட வேண்டாமா? என்று ஆளுங்கட்சி, பிற கட்சிகளைக் கேட்கிறது.

கிளர்ச்சிக்காரர்களே, "இவ்வளவு மோசமான நிர்வாகத்தை, பொறுப்புள்ள எந்தக் கட்சியேனும் ஆதரிக்க முடியுமா? கண்டித்திட வேண்டாமா?" என்று கேட்கின்றனர்.

சட்டமும் சமாதானமும் நிலவிடவேண்டும்; ஒழுங்குமுறை காப்பாற்றப்பட வேண்டும், எக்காரணத்தைக்கொண்டும், எத்தனைச் சிக்கலுள்ள பிரச்சினையாக இருப்பினும், வன்முறை மூலம் தீர்வுகாணலாம் என்ற நினைப்பே ஏழலாகாது என்பதிலே தளராத நம்பிக்கைகொண்டுள்ள நம் போன்றவர்களின் நிலைமை, தம்பி! மிகவும் சங்கடத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

கட்டடங்கள் தகர்க்கப்படுவதையும், ரயில்கள் கவிழ்க்கப்படுவதையும் காணும்போது எப்படி நமது மனம் பதறுகிறதோ அதுபோலவே, மக்கள் விரட்டி விரட்டி அடிக்கப்படுவதையும், சுட்டுக் கொல்லப்படுவதையும் காணும்போதும் மனம் பதறத்தானே செய்கிறது! இதிலே எதைத் தொடர்ந்து எது நடைபெறுகிறது, எதன் விளைவாக எது நடைபெறுகிறது என்று கண்டறியத்தான் முடிகிறதா! கண்டறிவதுதான் எளிதா! இல்லையே! கிளர்ச்சி நடாத்துவோர் கூறுகின்றர், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பது நமக்கு நாமே கேடு தேடிக்கொள்வது என்ற சாதாரண உண்மைகூடவா எமக்குத் தெரியாது—நாங்கள் என்ன அந்த அளவுக்குக்கூடவா அறிவுத் தெளிவு பெற்றில்லை! நாங்கள் மிக நியாயமான காரணத்துக்காக நடத்தும் கிளர்ச்சிகளை வேண்டுமென்றே ஒடுக்குவதற்காக, கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது இந்த அரசு! அந்தக் கொடுமையைக் காணும் மக்கள் எமது கட்டுதிட்டங்களையும் மீறி வன்முறையிலே ஈடுபடுகின்றனர்; நாங்கள் என்ன செய்ய? என்று செப்புகின்றனர்.

நியாயம் எங்கே என்று தேடிக் கண்டுபிடிப்பதற்குள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள் சாம்பலாகி விடுகிறது; விலைமதிக்கொணாத உயிர் பல பறிக்கப்பட்டுப் போய்விடுகின்றன? நாட்டிலே மறைக்கப்பட முடியாத விதமான வடுக்கள் ஏற்பட்டு விடுகின்றன.

தம்பி! இவைபற்றி நான் இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்சினையை அலசிப் பார்த்திடவேண்டும் என்பதற்காக அல்ல; இத்தகைய மோசமான, வேதனை தரத்தக்க சூழ்நிலையின் பின்னணியில், பொதுத்தேர்தல் நடத்தப்பட இருக்கிறதே அதனைக் கவனித்தனையா என்று உன்னைக் கேட்பதற்காகத்தான்.

சட்டம் சமாதானம், ஒழுங்கு இவைகள் செம்மையான முறையிலே காப்பாற்றப்பட முடியாத சூழ்நிலையில்,

உணவு நெருக்கடி பஞ்சம், பட்டினிச்சாவு என்ற அளவு முற்றிவிட்டிருக்கிற சூழ்நிலையில்'

சமூகத்தின் எந்த ஒரு முனையிலும், மனநிறைவு இல்லாமல், பிரச்சினைகள் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், பொதுத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது.

**முடியும்; முயன்றால்!**

புண்ணுக்கு மருந்திட்டு புன்னகையை வரவழைத்து, மக்களை ஓரளவு மனநிறைவு கொண்டிடச் செய்து பிறகே, பொதுத்தேர்தலில் தமக்கு ஆதரவு அளித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் எந்த ஆளுங்கட்சியும் எண்ணம் கொண்டிடும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ, மூட்டிவிட்ட தீ அடங்கா முன்பு, மூண்டுவிட்ட வேதனை விரிவாகியுள்ள வேளையில், ஆத்திரம் பொங்கிடும் நிலையிலே உள்ள மக்களிடம் ஆதரவு பெற்று பொதுத் தேர்தலிலே வெற்றியைப் பெற்றிட முடியும் என்று நம்புகிறது!

பஞ்சமும் பட்டினியும் கொட்டும் நிலையில், பட்டினிச் சாவு கண்களை உறுத்தும் நிலையில், அகவிலை தாக்கிடும் நிலையில் எப்படி மக்களை அணுகுவது என்ற அச்சமோ, இந்த நிலையில் உள்ள மக்களிடம் ஆதரவு திரட்டிட முடியுமா என்பதிலே அய்யப்பாடோ, துளியும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரியக்காணோம். இதனை என்னென்பது! துணிச்சல் என்பதா? அல்லது மக்கள் வேதனையிலே தத்தளிக்கும் வேளைதான் அவர்களின் ஓட்டுகளைப் பறித்திடுவதற்கு ஏற்ற வேளை என்ற திட்டம் என்பதா? புரியவில்லை.

பஞ்சத்தைப் போக்க, பற்றாக்குறையை நீக்க, உணவு நெருக்கடியை நீக்க, அகவிலையைக் குறைக்க, எடுத்துகொள்ளப்பட வேண்டிய முயற்சிகளிலே காட்டவேண்டிய தீவிரமோ அக்கரையோ தென்படுவதைக்காட்டிலும், தேர்தல்பற்றிய தீவிரமும் அக்கறையுமே அதிகமாகக் காங்கிரஸ் வட்டாரத்திலே தெரிந்திடுவது காண்கிறோம்.

ஆகவே, காங்கிரஸ்கட்சி துணிச்சல் பெற்றிருப்பது மட்டுமல்லாமல், மக்களின் வாழ்வுபற்றிய அக்கறையுமற்று இருப்பது நன்றாகத் தெரிகிறது.

இந்தப்போக்கு இவ்வளவு வெளிப்படையாகத் தெரியும்போது, எதைக்கொண்டு அல்லது எதைக்காட்டி, மக்களுடைய ஆதரவைப் பெறமுடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக்கொண்டிருக்கிறது என்பது, உள்ளபடியே புதிராகத்தான் இருக்கிறது.

மக்களைக் கண்டால் வெட்கித் தலைகுனிய வேண்டிய பல செயல்கள், காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பு படுத்திப் பேசப்படுகின்றன. பாராளுமன்றத்திலே எழுப்படும் புகார்கள், பத்திரிகைகளிலே விவாதிக்கப்படும் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கவனிக்கும் போது, காங்கிரஸ்கட்சி மக்களைச் சந்தித்து தனக்கு ஆதரவு அளிக்கும்படி எந்த முகத்தை வைத்துக்கொண்டு கேட்கமுடியும் என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுகிறது. ஆனால், பார்க்கின்றாயே தம்பி! புதிய புதிய படகு மோட்டார்கள் பறக்கின்றன! புதுப்புது கதர்ச் சட்டைகள் தைக்கப்படுகின்றன! அவர் காங்கிரசில் சேர்ந்தார்! இவரை இழுத்துக்கொண்டார்கள்! —என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது. தேர்தல் வேலையிலே காங்கிரஸ்கட்சி மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டிருக்கிறது.

போதுமான அளவு உணவு கிடைக்கவில்லையே! பசியும் பட்டினியும் கொட்டுகிறதே என்று பதறுகிறார்கள், மக்கள்; அவர்களைப் பார்த்துக் காங்கிரஸ் தலைவர்கள், "சரி! சரி! இதுவரையில் திங்கட்கிழமை மட்டும் சாப்பிடாமல் இருந்துவந்தீர்கள் அல்லவா? இனி வியாழக் கிழமைகளிலும் சாப்பிடாதீர்கள்!—என்று யோசனை கூறுவதோடு தமது பொறுப்பு முடிந்து விட்டதாகக் கருதிக்கொள்கிறார்கள்.

வாரத்துக்கு இரண்டு நாட்கள், கட்டாயப் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைக்கு நாட்டு நிர்வாகத்தை மோசமாக்கிவிட்டதற்காக வெட்கப்படாமல், வருத்தப்படாமல், அதே காங்கிரஸ் கட்சி, எந்த மக்களைப் பட்டினிபோடுகிறதோ அதே மக்களிடம் 'ஓட்டு' போடும்படியும் வற்புறுத்துகிறது; போடுவார்கள் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறது.

தம்பி! படக்காட்சிகளிலே பார்த்திருக்கலாம் பாதகன் ஒருவன், ஒரு நல்ல குடும்பத்தை நாசமாக்கி, அக்குடும்பத்துப் பாவையைச் சிறைப்பிடித்து, அம்மங்கை அழுத கண்களுடன் இருந்திடும் போது, சவுக்காலடித்து "ஆடு! ஆடடி அணங்கே! ஆடு! ஐயாவின் மனம் மகிழும்படி ஆடு!" என்று கட்டளையிடுவது போன்ற சம்பவத்தை. அதுபோல, மக்களைப் பட்டினிக் கொடுமைக்கு ஆளாக்கிவிட்டு, அதிகாரத்தைக்காட்டி, அதேமக்களை, "போடு ஓட்டு!" என்று மிரட்டிப் பறித்திடவும் காங்கிரஸ் திட்டமிடுகிறது.

எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான அளவு உணவு நெருக்கடி முற்றிவிட்டிருக்கிறது.

நாலுநாட்கள் தொடர்ந்து மழை பெய்கிறது என்றால், உணவு அமைச்சர் சுப்பிரமணியம் துள்ளிக் குதிக்கிறார் மகிழ்ச்சியால், "பெய்துவிட்டது பெருமழை! பொய்த்துவிட்டது எதிர்க்கட்சியின் ஆரூடம்! விளைச்சல் அமோகமாக இருக்கப்போகிறது! உணவு நெருக்கடி இனி இராது!" என்றெல்லாம் சிந்துபாடுகிறார். ஆனால், மழை பெருமழையாவதும், வெள்ளமாகி விடுவதும், விளைந்ததை அழிப்பதும் நடைபெற்று விடுவது காண்கின்றோம். மகிழ்ச்சி மடிந்துபடுகிறது; திகைப்பு மேலிடுகிறது; பயிர்மட்டுமல்ல! அமைச்சர் தயாரித்த புள்ளிவிவரங்கள் 'தீய்ந்து போய்விடுகின்றன. உணவு நெருக்கடி பயங்கரமான வடிவம் எடுக்கிறது.

தேவைப்படும் அளவுக்கு உணவுப் பொருள் கொடுத்துக்கொண்டு வருவோம் என்று அமெரிக்கா கூறிவிட்டது; ஆகவே, உணவு நெருக்கடிபற்றியபயம் வேண்டாம், போதுமான உணவுப் பொருள் கப்பல் கப்பலாக வந்துகொண்டிருக்கும் என்று அமைச்சர் பெருமிதத்துடன் பேசிவந்தார்.

இப்போது அமைச்சரின் குரலிலே வருத்தம் தோய்ந்திருக்கக் காண்கின்றோம்.

ஆகஸ்ட்டு மாதமே கேட்டோம், உடனடியாக உணவுப் பொருள் அனுப்பிக் கொடுக்கும்படி, வரக்காணோம் என்று வருத்தம் தெரிவிக்கிறார்.

அமெரிக்காவின் போக்கிலேயே ஒரு திடீர் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


உணவுப் பொருள் அனுப்பிக்கொடுக்கும் திட்டம் முடக்கப்பட்டு விட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்து கொண்டிருப்பதன் மூலம், அருவருப்பு தரத்தக்க சில அரசியல் பிரச்சினைகளைக் கிளறிக்கொள்ள முடியும்! ஆகவே, அமெரிக்காவின் போக்கிலே ஒரு மாறுதல் ஏற்படக் காரணம் என்ன என்று ஆராய்வதைக் காட்டிலும், ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தீர்க்க வேறு எங்கிருந்து உணவுப் பொருள் தருவிக்கலாம், எந்த முறையில் என்பதுபற்றிய ஏற்பாட்டினைக் கவனிப்பதே முக்கியமானதாகும்.

ஆனால் காங்கிரசின் பெரிய தலைவர்கள் இதிலே கவனம் செலுத்துவதைவிட, யாரைப் பிடித்திழுத்து எந்தத் தொகுதியிலே நிற்கவைக்கலாம் என்பதிலேதான் மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டுள்ளனர்!

தம்பி! காங்கிரசின் பெரிய தலைவர்கள், தமது கட்சியிலே கொள்கைத் தூய்மை மாய்ந்து போய்விட்டதனாலேயும், தமது ஆட்சியினாலே மனம் குமுறிப் போயுள்ள நிலைக்கு மக்கள் சென்று விட்டதனாலேயும், இனி அந்த மக்களுடைய அன்பான ஆதரவைப் பெற முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். ஆதரவை இனிப் பெற்றுக்கொள்ள, அச்சமூட்டும் முறையையே மேற்கொள்வது என்று திட்டமிட்டு விட்டனர், அதற்காக, எவராக இருப்பினும், அவருடைய முன்தொடர்புகள் யாதாக இருப்பினும் கவலையில்லை அவர் பெரிய புள்ளியா, ஆள் கட்டு உள்ளவரா, ஜாதி உணர்ச்சியைத் தூண்டி பலம் பெறத்தக்கவரா, பணத்தாலே மக்களை விலைக்கு வாங்கக் கூடியவரா என்ற இவைகளை மட்டுமே கணக்கில் கொண்டு, புதியவர்களைப் பிடித்திழுத்துக் காங்கிரசுக்குப் பலம் சேர்க்கின்றனர்.

தம்பி! இரண்டொரு திங்களுக்கு முன்பு ஒரு நகரத்தில், நமது கழகக் கூட்டம்; நான் பேசினேன்; அன்று அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர், நமது கழகத்தவர், ஆண்டு பலவாக; எனக்கு நண்பர்; காங்கிரசு தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதிலே ஆர்வம் கொண்டவர்.

அவர், அன்றைய கூட்டத்திலே காட்டிய ஆர்வம், அனைவரும் பாராட்டத் தக்கதாக இருந்தது.

[அடுத்த இதழில் முடிவுறும்]

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

'வருகிருயா?'—என்ன கேள்வி இது?

'வர மாட்டேன்' என்ருல், என்னை விட்டுவிட்டுப் போய்விடுவார் போலும்!

'வந்தாலும் வா; வராவிட்டாலும் போ!' என்னும் கொள்கையா இது?

அல்லது...

'வராதே' என்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையில் அழைத்த பொய் அழைப்பா?

எண்ணப் பாம்புகளை வெள்ளிவீதி மிகத் திறமையாக அடக்கிஞள்.

"உங்கள் விருப்பம் போலச் செய்யுங்கள்" எனச் சூழ்ச்சியும் விரகும் மிக விடைகூறி வென்ருள் வெள்ளிவீதி.

அவன் விடையை எதிர்பாராமல் துறவிபோல உள்ளே சென்று விட்டாள்!

அவள் விடையால் ஒரு தெளிவும் அடைய முடியாமல் குழம்பிய புகழேந்தி படுக்கையில் படுத்தான்.

அவன் ஆர்வமெல்லாம் மங்கியிருந்தது.

மடிமை அவனறிவில் குடிவாழ்ந்தது.

## 49

இரவு உடைக்குள் பளிங்குப் பாவை நடமாடுவது போலப் பாலு அறைக்குள் வந்தாள். கட்டிளமை மேனியின் பெண்மைக் கவர்ச்சியின் செருக்கு விம்மி மதர்த்துப் பொங்கி வழிந்தது.

அளவு—அழகு—அமைப்பு—செழிப்பு— கதிர் வீசும் கொள்ளை இளமையெல்லாம் மேனுட்டு நாகரிக மெல்லுடைக்குள்ளிருந்து கண்களைப் பறித்தன.

கொக்கு முகம் மழித்தபடி ஓரக்கண்ணுல் அவளைப் பார்த்தான்.

சோம்பல் முறித்தவள் நாற்காலியில் நெளிந்தொசிந்த நிலையிலமர்ந்தாள். ஆங்கில நாளேட்டை எடுத்துப் பார்க்கலானுள்.

"பாலு!"

"உம்"

"புகழேந்தி பக்கம் 'வெற்றி ஏற்பட்டு விட்டதே?"

"உம்"

"என்ன பாலு? எதற்கெடுத்தாலும் 'உம்' தாஞ?"

"ஊம்?"

"பாலு, உனக்குச் சில நாள்களாக மனநிலை நன்ருக இல்லை போலிருக்கிறதே"

"ஊஉம்"

"பேசு பாலு"

"என்ன சொல்வது?"

"புகழேந்தியின்மீது ஒரு குற்றமும் மெய்ப்பிக்கப் பட வில்லையென்று தீர்ப்பாகி விட்டதே"

"உண்மைதானே?"

"என்ன? என்ன? உண்மையா? என்ன நீயும் பகைவன் பக்கம் பேசுகிருயே?...பாலு ஒரு செயலில் ஈடுபட்டுத் தோல்வியடையலாமா? பாலு, இதுவரை நீ தோற்றதுண்டா? எடுத்த செயல் எல்லாவற்றிலும் வெற்றி! வெற்றி! என வெற்றி முழக்க மிட்டவளல்லவா பாலு? ஏன் இப்போது உன் முயற்சி தோற்றது?"

"உனக்கும் எனக்கும் போதாதகாலம்!"

வெடுக்கெனத் திரும்பினுன் கொக்கு. சரீரென மழித்தக் கத்தி அவன் கன்னத்தில் கிழித்திடவே செங்குருதி வெண்ணுரைகளில் கலந்து வழிந்தது

வலி—அச்சம்—எரிச்சல்-மன உளைச்சல் எல்லாம் கொக்குவை எள்ளி ஆடின.

'ஆ!' எனக் கூவிய கொக்கு விரைந்து முகங் கழுவித் துடைத்துக் குருதி வழியாதபடி மாவு பூசினுன்.

"பாலு, சென்னையில் என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை என்று எத்தனை முறை சொல்லுவேன்? என் சொந்த வாழ்க்கையைப்பற்றி நீ கேட்கக் கூடாது. அது நாகரிகமில்லை."

"சரி. உடன்படுகிறேன். ஆனுல், உனக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்திருந்தால்..."

"துன்பம் நேர்ந்தது. முகிலன் என்னுயிரைக் காப்பாற்றினுர். அதனுல், அவர் வழக்கில் மேற்கொண்டு ஈடுபடவில்லை. என்னிடம் பணம் இருப்பதறிந்து கள்வர் சிலர் வளைத்துக் கொண்டனர். தற்செயலாக முகிலன் வந்து மீட்டார்.

அவர் வராவிட்டால் என்ன நேர்ந்திருக்குமோ... அப்பா! நினைத்தாலே குலை நடுங்குகிறது!"

சிலிர்த்தது பாலுவின் மேனி. அவள் விழிகளில் துன்பமும், வெறுப்பும், பழிவாங்கும் வெறியுணர்வும் படமெடுத்தாடி மறைந்தன.

"பாலு, நீ தனியாகச் சென்னைக்குச் செல்லாதே"

"ஏன்? உனக்குத் தனியாக இருக்க அச்சமாக இருக்கிறதா?"

"சீ!"

கலீரென நகைத்தாள் பாலு.

உடலை வளைத்து நெளித்து ஓவிய நாடகக் கோலங்களை உண்டாக்கி அழகுடல் அரங்கில் விழி விருந்துகளைப் படைத்தாள்.

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

கொக்கு முகவாய்க் கோடியை விரல்களால் வருடியவாறு ஆழ்ந்த எண்ணத்தில் மூழ்கினான். வானொலியில் மேளுட்டிசை முழங்கியது.

"வழுதி, நமக்கு உதவிதானே செய்தான்—பாலு?"

"ஆமாம்."

"பிறகென்ன? வழக்கு எப்படித் தோற்றது?"

"வழுதி ஒருவன் வழக்கைக் கெடுக்க முயன்றால் போதுமா? நச்சினார்க்கினியர் அரசியல் தொடர்புடையவர் என்று அவர் உதவியை நாடினோம். முகிலன் உன்னையும் என்னையும்விட அறிவுள்ளவர். ஏன் நச்சினார்கினியரையே வீழ்த்தும் அளவுக்கு வலை விரித்து விட்டார்!"

"என்ன?

"ஆமாம். முகிலனை நீ முட்டால் எனத்தப்புக் கணக்கு போட்டிருக்கிறாய்! அவருடைய அறிவும் செயற்றிறமும் அவருக்கு எதிர்காலத்தில் உண்மையிலேயே பெரிய தகுதிகளைக் கட்டாயம் தரும்."

"பாலூ! பகைவனைப் பாராட்டாதே; பழி அவன் வீழ்ச்சி அப்போதுதான் உறுதியாகும்."

"கொக்கு, நீ மக்கு, முகிலனைப் பழித்தால் நாம் தான் முட்டாள் பட்டம் பெற நேரும்."

"உம் சொல்லு."

"நச்சினார்க்கினியருக்கு உள்ள ஆற்றலை அவர் கட்சியிலேயே வீழ்த்தக்கூடிய வகையில், அவருடைய குற்றங்களைக் கண்டுபிடித்து, அவரின் அரசியல் எதிரிகளுக்குக் கொடுத்து விட்டார் முகிலன். இதையறிந்த நச்சினார்க்கினியர் நமக்கு உதவ முன்வரவில்லை. நம்மை அவர் பயன்படுத்திக் கொண்டார். அவர் நமக்குப் பயன்படவில்லை. உம்."

"முகிலன் உதவி இல்லாமலிருந்தால் புகழேந்தி கட்டாயம் வீழ்த்திருப்பான் அல்லவா?"

"ஆமாம். ஆனால், புகழேந்தியும் தன்மீது ஒரு குற்றங்குறைகூட இல்லாதபடி பணியாற்றியிருக்கிறானே! அவனைக் குறித்து மேல் அலுவலர் எல்லாரும் பாராட்டுகின்றனரே! உன்னால் அத்தகை நற்பெயர் வாங்க முடியவில்லையே!"

எனக் கூறிய பாலு குளிக்கும் அறைக்குள் நுழைந்தாள்.

அழகு திரையிலிருந்து விடுதலை பெற்றது. வெந்நீர் அவளுடலைத் தழுவிவருடியணைத்தது. நீரும் அவள் மேனியில் பட்டுச் சிலிர்த்தது.

குளிக்கும்போது தனக்குள் தானே பாலு பேசிக் கொள்ளலானாள்.

(வளரும்)

சிறுகதை

# புதுப் பண்ணையார்

காசிதாசன்

சந்திரா மாடிமேல் நின்று கொண்டு பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை குமார் உருவம் தென்படவே இல்லை. மாடியிலிருந்து பார்த்தால் குமாரின் குடிசை நன்ருகத் தெரியும், ஓலைக் குடிசை முன்னே ஒரு தென்னை மரம் இதுதான் குமாரின் வீட்டு விலாசம். காலையிலேயே வந்துவிடும் குமார் இரண்டு நாட்களாகக் காணவில்லை. அவள் மனம் வருந்தியது. ஏன் வரவில்லை—ஒருவேளை வெளியூர் எங்கேனும் சென்றிருப்பாரா? அவள் எண்ணம் அலை மோதிற்று. எப்படியும் அவர் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு வருவதென்று முடிவு செய்தாள். சந்திரா ஒரு பணக்கார வீட்டுப் பெண். பண்ணையார் தனசேகர முதலியாரின் ஒரே வாரிசு. குமார் அதற்கு நேர் விரோதி. மிகவும் ஏழை. ஒண்டிக் கட்டை, உடலைத் தவிர சொத்து என்று சொல்லிக் கொள்வதற்கு அவனிடம் ஏதுமில்லை. அவன் சந்திராவின் வீட்டில் வேலை செய்து வந்தான். மிகவும் நம்பிக்கையானவன். கொடுத்தவேலையை ஒழுங்காகச் செய்து முடிப்பான். ஆகையினுல்தான் தனசேகர முதலியார் குமாரிடத்தில் அதிக மதிப்பு கொண்டிருந்தார். குமாரின் அழகைக் கண்டு பிரமித்தாள் சந்திரா. பெண்களின் மனதில் ஆசை புகுந்துகொண்டால் அது அவ்வளவு சீக்கிரத்தில் நீங்காது, வலுவடையும். அதுபோலவே சந்திரா குமாரை மானசீகமாக மனதார விரும்பிவிட்டாள், அவனே தன் வருங்கால கணவன் என்றும் வரித்துவிட்டாள். ஆகவே அவளைப் பொறுத்தவரை அவன் கணவனுஞன். சந்திராவுக்குத் தாயில்லை. தந்தை மட்டும் தான். பெரிய பண்ணை. எடுபிடி ஆட்கள், வேலைக்காரி இத்யாதிகள் மூலம் சந்திரா மனநிறைவைப் பெறவில்லை. இவைகளுக் கிடையில் அவ்வப்போது வந்து போகும் குமாரைப் பார்த்து மனம் திருப்தி படுவாள். ஆனுல் குமாரோ இதைப்பற்றி யெல்லாம் துளிகூட நினைக்கவில்லை.

ஒருநாள் மாலை நேரம். நெல் மூட்டைகளை அடுக்கிவிட்டு வெளியே வந்த குமார் தனக்கு எதிர்த்தாற்போல் சந்திரா நின்று கொண்டிருப்பதைக் கண்டான். ‘இந்தாங்க காபி’ என்று தம்ளரை நீட்டினுள்.

“என்னங்க காபியா? எனக்கா?”

“ஆமாங்க, ஏன் சாப்பிடமாட்டீங்களா?”

“இல்லை. நான் உங்கள் வீட்டு வேலைக்காரன், எனக்கு நீங்களே காபி தருவதென்ருல் என்னுல் நம்பமுடியவில்லை. அதனுல்தான்.”

எங்கள் வீட்டு முன்னேற்றத்திற்காக இரவு பகலாக உழைக்கிறீர்கள்—அப்படியிருக்க நான் உங்களுக்கு காபி கொடுப்பதில் என்ன தவறு? மேலும் உங்களைப்போல் உண்மையில் உழைப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்,

“அப்படிச் சொல்லாதீர்கள்—ஏதோ என் கடமையைச் செய்கிறேன் சரி கொடுங்க” என்று காபி தம்ளரை வாங்கி ஒரே மூச்சாக குடித்துவிடுகிருன். “ஆமாம் இது என்ன நெஸ் காபிபோல் தெரிகிறது.” ஆமாம் என்பதற்கு அடையாளமாக தலையசைத்தாள் சந்திரா.

குமாரின் தேவைகளை அவ்வப்போது கவனித்துவந்தாள். ஆனுல் இவைகளை யெல்லாம் ஏதோ பாசத்தால் செய்கிருள் என்றுதான் குமார் நினைத்தான் பாவம்! இதைப்பற்றி யெல்லாம் நினைக்கும் நிலையில் அவன் வசதியில்லையே. ஐந்தாறு நாள் கழிந்திருக்கும், வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு திண்ணைமீது அமர்ந்தான் குமார். உடலில் சோர்வு இருந்தது. வீட்டிலிருந்து வெளியே வந்த சந்திரா “ஏங்க, வெந்நீர் தயாராக இருக்கிறது குளித்துவிட்டுப் போங்களேன்...

“வேண்டாம் சந்திரா வீட்டிற்குப் போய்விடுகிறேன்.”

“ஏங்க, உங்க வீட்டிலே யார் இருக்கா ...... நீங்களே தானே அடுப்பை பற்றவைக்கணும், நீங்க இங்கேயே குளியுங்க......இதுவும் உங்க வீடுதானே!

“ஆமாம், சந்திரா இதுவும் எங்க வீடுதான். ஆனுல் வசதிகளை அனுபவிக்க அல்ல.”

“ஹா ...... அப்படின்ஞ நீங்க இங்கே குளிக்கவே மாட்டீங்களா?
......

“ஏம்பா, குமார்......குழந்தை இவ்வளவுதூரம் சொல்லுதே குளிச்சிட்டுத்தான் போயேன்!... என்ருர் அப்போது அங்குவந்த தனசேகர முதலியார். சரி என்று குமார் குளிக்க ஒப்புக்கொண்டு பாத்ரூமினுள் நுழைந்தான்.

சந்திரா தன்மீது வைத்திருக்கும் அளவுகடந்த அன்பைப்பற்றி அதிசயப்பட்டான். இப்போது நாளுக்கு நாள் அதிக அன்பு காட்ட ஆரம்பித்தாள் சந்திரா. தன்மீதும் அக்கரை காட்ட ஒரு ஜீவன் இருப்பதைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சி அடைந்தான் குமார்.

அன்று தனசேகர முதலியார் மண்டியிலிருந்து வரவேண்டிய பாக்கித் தொகையை வாங்கிவர பக்கத்து டவுனுக்குச் சென்றுவிட்டார். செல்லும்போது குமாரை அழைத்து வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படியும், தான் வர நேரமாகலாம் என்றும் சொல்லியிருந்தார். தன் முதலாளியின் கட்டளையை நிறைவேற்ற திண்ணையில் அமர்ந்திருந்தான் குமார். சந்திரா மட்டும்தான் வீட்டிலிருந்தாள்.

சந்திரா வெளியே வந்தாள்.

"என்னங்க நீங்க எனக்குக் காவலா?"

"ஆமாம்"

"வேலியே பயிரை மேயுமா?... அப்படி ஒரு பழமொழி இருக்குதுங்களா?"

வேலி எப்படி சந்திரா பயிரை மேயும். அப்படி மேய்ந்தால் அது வேலியாக இருக்க முடியாது.

"ஏங்க, அந்த வேலியாக நீங்க எனக்குத் தாலி கட்டிட்டீங்கன்னு ......

"சந்திரா—அவனுக்கு ஒன்றும் புரியவில்லே. ஒரு கிலோ சர்க்கரையில் ஒரு எறும்பு விழுந்ததுபோல் இருந்தது.

"ஆமாங்க, நான் உங்களை மனமார விரும்புகிறேன். உங்களை இப்பவே அடையவும் துடிக்கிறேன்...உணர்ச்சி நிலையில் அவள் விழிகள் சிவந்தன.

"சந்திரா, எதற்கும் அளவு வேண்டும்; அது அது அந்தஸ்திற்குத் தகுந்த மாதிரிதான் ஆசைப்பட வேண்டும்.

"தெரியுது, குமார் நீங்க ஏழைன்னு சொல்ல வர்றீங்க—அதெல்லாம் தெரிந்ததுதானே, பணம் என்னங்க இன்னைக்கு இருக்கும்..."சந்திரா, பணம்தான் இந்த உலகின் ஜீவநாடி. அது இல்லையென்றால் உலகில் ஒன்றுமில்லை. பணம்தான் என்போன்றவர்களுக் கெல்லாம் ஜீவன். அது உம்மைப் போன்றவர்கட்கு அழகுப் பொருள். பணமே இருக்குமிடம் உங்கள் இல்லம். பணத்தையே பார்க்காதவன் நான் பசியையே பார்த்துப் பழக்கப்பட்டவன். உன் வீட்டு வேலைக்காரன்—நீ இடும் வேலையைச் செய்பவன் பிச்சை மாதிரி சாப்பிடும் நான் உன்னை—இந்த வீட்டு எஜமானியை எப்படி மணக்க முடியும்? இறைவனின் இன்னருளால் நாம் இருவரும் நலமாய் இருக்க அவரவர் வழி நடப்பதே நன்று சந்திரா. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடலாமா?"

"எட்டாத பழமாக இருக்கலாம் அதுவே அறுந்து உங்கள் வாயில் விழும்போது...

"பறக்கள்தான் போகும் ...... ஏழைக்கு ஆயிரம் ரூபாய் கிழே இருந்து கிடைத்தாலும் திருடித்தான் இருக்கிறான் என்ற சந்தேகம் வருவது இயற்கை. இதை இதோடு விட்டுவிடு சந்திரா. கற்பனை — மாயை — சிந்தித்து செயல்படு. எத்தனையோ பண்ணையார் வீட்டு பிள்ளைகள் உனக்காக காத்திருக்கிறார்கள்."

"அறிவுரை முடிந்து விட்டதா? குமார். இதோ பாருங்கள் நான் உங்களை விரும்புகிறேன் — உங்களையேதான் மணந்துகொள்வேன். அப்படி யில்லையென்றால்...

சந்திரா...வா—சாப்பாடு போடு —பேச்சை மாற்றினான். மௌனமாக உணவைப் பரிமாறினாள். வேண்டுமென்றே அவள் கையை அவன் கைமீது உரசவிட்டாள். அவன் ஒன்றும் புரியாமல் அந்த இன்ப நிலையில் பதிந்திருந்தான். சிறிதுநேரம் கழித்ததும் தனசேகர முதலியார் வந்ததும் குமார் விடைபெற்றுக்கொண்டு தன் வீடு திரும்பிவிட்டான். அன்று சென்றவன்தான் இன்னும் திரும்பி வரவில்லை. ஒருவேளை இங்கு வராமலேயே இருந்து விடுவாரா? என்று சந்தேகித்தாள். குமாரின் வீட்டை அடைந்து உள்ளே நுழைந்தபோது திக்கென்றிருந்தது சந்திராவுக்கு. அங்கே கட்டிலில் தாடி மீசையுடன் உடல் நலம் குன்றி உடல் இளைத்து படுத்துக் கிடந்தான் குமார். அருகில் சென்று நெற்றியில் கையை வைத்துப் பார்த்தபோது சூடு அதிகமாகவே இருந்தது.

"என்னங்க, உங்க உடம்புக்கு என்ன? சொல்லுங்கள்—"

"சந்திரா, உங்க வீட்டிலிருந்து வந்த அன்றிலிருந்து ஒரே ஜுரம் தலைவலி — எதைச் சாப்பிட்டாலும் வெறுப்பு—

"இருங்க...வர்றேன்."

வீட்டை விட்டு வெளியே வந்தவள் நேரே கடைவீதிக்குச் சென்று பாலும், ரொட்டித் துண்டையும் வாங்கிவந்து ரொட்டியை பாலில் நனைத்துச் சிறிது சிறிதாகக் குமாரின் வாயினுள் குழந்தைக்கு தாய் சோறு ஊட்டுவதுபோல அன்புடன் ஊட்டினாள். குமாருக்குச் சிறிது தெம்பு ஏற்பட்டது. இதுபோலவே தினமும் அவள் அவனை கவனித்து வரலானாள்.

இப்போது குமாரின் உடல்நலம் முன்போலவே பூரண நலம் அடைந்து விட்டிருந்தது. குமாரின் முன்னேற்றத்திற்கு, உடல் நலத்திற்கு பாடுபட்ட சந்திராவை அவன் மனம் நாடியது—இதுவரை ஒதுங்கியிருந்த குமார் இப்போதெல்லாம் அவளுடன் அன்புடன் பேச தலைப்பட்டான் இது ஒரு பெரிய வரமாகவே இருந்தது சந்திராவுக்கு. இந்த விஷயத்தை எப்படி அப்பாவிடம் ஆரம்பிப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை.

நாட்கள் சென்றன.

பக்கத்து ஊர் பண்ணையார் அன்று சந்திரா வீட்டுக்கு வந்திருந்தார். தனசேகர முதலியார் அவரிடம் பேசிக் கொண்டிருந்த போதுதான் சந்திராவை பெண் கேட்க வந்திருக்கிறார் என்ற விஷயம் அவளுக்கு விளங்கிற்று.



வெளிவருகிறது!

# ‘காஞ்சி’

## அறிஞர் அண்ணா — பொங்கல் சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்
கழகத் தலைவர் கலைஞர்
கழகப் பொதுச்செயலாளர் நாவலர்
மற்றும்
அமைச்சர் பெருமக்கள்
அருந்தமிழ்ச் சான்றோர்கள்
இளைய தலைமுறையின்
இலட்சிய எழுத்தாளர்கள்
அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு தைத்திங்களில் வெளிவரவிருக்கிறது.

கவிஞர் மணிவேந்தன் அவர்களின் "பயிற்று மொழிப் பாவியம்" சிறப்பு மலரில் இடம் பெறுகிறது.

கவிஞர் தமிழ்ச் சுரபியின் "அண்ணா பிள்ளைத் தமிழ்" தொடரோவியம் சிறப்பு மலரிலிருந்து தொடர்ந்து வெளிவரவிருக்கிறது.

விவரங்கட்கு:

மேலாளர்,
"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.


தனசேகர முதலியாரும் பெண்ணைக் கேட்டுச் சொல்வதாக கூறி அனுப்பிவிட்டார். அன்று மாலையே குமாரிடம் விஷயத்தைக் கூறினாள் சந்திரா. "அதற்குத்தான் சந்திரா அப்போதே சொன்னேன்...கேட்டாயா! இப்போது என்ன செய்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை." என்றான் குமார்.

"சரி...நீங்களே— எங்கப்பாவை பெண் கேளுங்களேன்."

"என்ன சந்திரா இது, கிண்டல் செய்கிறாயா?"

"இல்லீங்க கேட்டுப் பாருங்களேன்".

"ஏதாவது திட்டி பேசிவிட்டால்...காரியம் கெட்டுவிடுமே—"

"அப்போது நானும் அங்கு தானே இருக்கப் போகிறேன்—" "வேண்டாம் சந்திரா. நீயே உன் அப்பாவிடம் சொல்லிவிடு." இரவு சாப்பாட்டு நேரம். தனசேகர முதலியார் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

"சந்திரா...உனக்கு எப்படியும் இந்த வைகாசியில் கல்யாணத்தை முடிச்சிடணும்...உனக்குப் பிடித்த பண்ணையார் பிள்ளையை சொல்லேன் அவனையே மாப்பிள்ளையாக் கிடறேன்"—

அப்பா—

என்னம்மா—

"பண்ணையார் பிள்ளைதான் மாப்பிள்ளையா வரணுமா?"

'ஏம்மா—நம்ம அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரிதானே...சரி வேறு யாரை மாப்பிள்ளையா நெனச்சிருக்கே...பண்ணையார் பையனை மாப்பிள்ளை ஆக்காம கூலிக்காரனையா மாப்பிள்ளையாக்கச் சொல்கிறாய்?

"ஆமாம் அப்பா..." நம்ம குமாரைத்தான்—"

பிசைந்த சோற்றை மீண்டும் பிசைந்து கொண்டு உருட்டிக் கொண்டிருந்தார்...தனசேகர முதலியார்...நன்றாக யோசித்துத் தான் சொல்கிறாயா சந்திரா—"

"ஆமாம் அப்பா அவர் மிகவும் நல்லவர்—"

குமாரைப் பற்றி எங்கிட்டேயே சொல்றியாம்மா...அவன் எப்படி என்னிடம் விசுவாசம் கொண்டுள்ளான் என்பது எனக்குத்தாம்மா தெரியும். இப்படி ஒரு நல்ல மாப்பிள்ளையை, ஏழைன்னுகூட பார்க்காமே தேர்ந்தெடுத்து இருக்கிறயே நீதாம்மா எம்பொண்ணு ...அது சரி...அந்த குமார் இதற்கு சம்மதிக்கணுமே—குமார் ஏழை ஆனாலும் ரோஷக்காரன்— "அவர்கூட சம்மதம் சொல்லிவிட்டாரப்பா அதன் பிறகுதான் உங்ககிட்டே சொன்னேன்—"

"சந்திரா... அப்படியானால் குமாரைப் பார்த்து விஷயத்தைக் கூறி அழைத்து வருகிறேன்...... இனிமேல் நம்ம வீட்டுக்கு குமார் தான் புதுப்பண்ணையார்...

புதுப்பண்ணையாரை வரவேற்க செந்தாமரை முகத்துடன் காத்துக்கொண்டிருந்தாள் சந்திரா.

[4-ஆம் பக்கத் தொடர்ச்சி]

‘பணம்’’ வாங்கும் டாக்டர் கிடையாது; பொது மருத்துவம். வயதானவர்களுக்கெல்லாம் பென்ஷன் ...இப்படிப் பல வசதிகள்!। பழைய அரண்மனையும், அதைச் சுற்றியுள்ள இடமும் கண்களைக் கவரும். 1338-ல் கட்டப்பட்ட ஒரு மாதா கோவில். அங்கு ஒரு பெரிய மணிக்கூண்டு. ஒரு மணி முடியும்போது மணிக் கூண்டுக்கு வெளியே சில சிலைகள் வந்து நாட்டியமாடுகின்றன; இசையும் கேட்கிறது. ஏராளமான சுற்றுலாக் குழுவினர் இதனை ரசிக்கக் காத்துக் கிடக்கிறார்கள்!!

பாரிஸ் பட்டணம்! எந்தப் பெரு நகரத்தையெடுத்துக் கொண்டாலும் இடையில் ஆறுகள் அமைந்துள்ளன. இலண்டனில் தேம்ஸ்! பெர்லினில் ரைன்! பாரிசில் சீன் நதி! இந்நதியின் இடதுபுறம் புதிய பாரிஸ்—வலதுபுறம் பழைய பாரிஸ். ஆகா! அற்புதமான கலையமைப்புக் கொண்ட கட்டடங்கள்! எங்கு பார்த்தாலும் வியக்கத்தக்க சிலைகள்! ‘ஆபரா ஹவுஸ்’ என்பது மாவீரன் நெப்போலியன் கட்டியது. கட்டட வாயிலில் இசை மேதைகளான மோசார்ட், பெதோவன் போன்றோருக்குச் சிலைகள். ஓர் அற்புதமான சிலையைக் கண்டேன். அந்த அழகுச் சிலையின் கையில் முகம் பார்க்கும் கண்ணாடி—கல்லில்தான்! அக் கண்ணாடியில் அந்தச் சிலையின் தலை தெரிவது போலச் சிற்பி வடித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளின் பெரு நகரங்களில் கார் நிறுத்துவதென்பது பெரும்பாடு. கார் நிறுத்த மட்டும் பல மாடிக் கட்டடங்கள் உள்ளன. பாரிசில் ஒரு கட்டடம்! பல அடுக்கு மாடி! ஒவ்வொரு மாடியிலும் வரிசை வரிசையாக ஆறாயிரம் கார்கள், ‘லிப்ட்’ மூலம் கொண்டுபோய் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நாமும் இன்னும் சில ஆண்டுகளில் இப்படிப்பட்ட கட்டடங்களைச் சென்னையில் எழுப்ப நேரலாம். நெப்போலியனின் வெற்றியின் சின்னமாக ஒரு மாதா கோயில்; அதனைச் சுற்றி 52 பெரிய பெரிய தூண்கள்: 52 வாரங்களைக் குறிக்கிறதாம். லூயி மன்னனால் உருவாக்கப்பட்ட பெரிய தெரு ‘‘ஸ்கொயர் காங்கார்ட்.’’ பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிப் படித்த நான் இங்கே எந்த இடத்தில் லூயி மன்னனின் சிரத்தைக் கொய்தார்கள் என்று தேடினேன். நெப்போலியன் கட்ட ஆரம்பித்து அவனுக்குப் பின்னால் முடிக்கப்பட்ட ‘ஆர்ச் ஆப்டிரையம்ப்’லிருந்து வரிசை வரிசையாக 12 தெருக்கள் பிரிந்து செல்வது அழகாயுள்ளளது. நெப்போலியன் படித்த காவேலரி’ என்னுமிடம்...புரட்சிக்குப் பிறகு தற்காலிகமாக மன்னர் குடும்பம் தங்கியிருந்த மாளிகை, அதனுள்ளே உலகம் வியக்கும் ‘மோனலிசா’ ஓவியமிருக்கிறது. பெயர் பெற்ற நாட்டர்டாம் சர்ச்சுக்குப் போனேம்.

பாரிஸ் என்றாலே ‘ஈபிள்டவர்’ எல்லாருக்கும் கவனம் வரும். ஒப்பற்ற இந்தக் கோபுரத்தை ஒரு கண்காட்சியின் போது கட்டினார்களாம். பிறகு அதை இடிக்கவேண்டும் என்று பாரிஸ் மாநகராட்சி முடிவு கட்டியதாம். முழுதும் எஃகாலானதால், கட்டியதைவிட இடிக்க ஆகும் செலவைக் கணக்கிட்டு, ‘இப்படியே இருந்துவிட்டுத் தொலையட்டும்!’ என்று விட்டு விட்டார்களாம்!

பாரிசிலிருந்து 12 மைல் தொலைவில் இருப்பது வெர்சேல்ஸ் நகரமாகும். அடடா! அங்கு நுழைந்த துமே என் உடல் புல்லரித்தது. எப்படிப்பட்ட அரண்மனை லூயி மன்னனுக்கு; மன்னன் வாழ்ந்த இடம்...மகாராணி அண்டாய்னட், கீழே ரொட்டி, ரொட்டியென்று பரதவித்த மக்களைப்பார்த்து, ‘ரொட்டி கிடைக்கவில்லையா? கேக்சாப்பிடுங்களேன்!’ என்று சொன்ன மாடம். அரசனின் விருந்து மண்டபம் எல்லாவற்றையும் பார்த்தேன். ஒப்பற்ற அரண்மனை! இதைப் பார்த்த பிரெஞ்சு நாட்டுக் குடிசை வாசிகள், ‘புரட்சி! புரட்சி!’ என்று பொங்கியதில் ஆச்சரியமில்லை, இரவில் ‘‘லிடோ’’ என்கிற நடன அரங்குக்குச் சென்றிருந்தோம். சுற்றுலாவாசிகளுக்கு ஒரு ‘சொர்க்கம்’ இது! டிக்கெட்டை நமது தூதுவரகம் மூலம் ஏற்பாடு செய்து கொண்டோம். ‘லிடோ’ ‘மறலியன் ரோஞ்’ போன்ற நடன அரங்குகளை அவசியம் பார்க்க வேண்டும்! வெறும் நாடக அரங்கில் பூகம்பம் வருகிறது...எரிமலை வெடிக்கிறது... ஒரே சமயத்தில் 50க்கு மேற்பட்ட குதிரைகள் ஓடி வருகின்றன...எப்படித்தான் செய்கிறார்களோ?

பாரிஸ்!

ஆகா, எவ்வளவு சிலைகள்! ஒருவரைக் கேட்டேன்,’’ ‘‘ஜெர்மனியில் ஹிட்லர் படையெடுத்த போது ஏன் எதிர்க்காமல் சரணடைந்தீர்கள்?’’. ‘‘எங்கள் புராதனச் சின்னங்களும் பாரிசின் அழகும் குண்டு வீச்சால் பாழாகாமலிருக்கத்தான்!’’ என்று அவர் பதில் சொன்னார்.!!

ஜெனீவா—ஸ்விட்சர்லாந்தின் தலைநகர் சேர்ந்தோம். ஐரோப்பிய நாடுகளுக்குள் எங்குச் செல்வதென்றாலும் ஒருமணி, முக்கால்மணிதான் 125 நாடுகள் உறுப்பினர்களாகியுள்ள உலக சுகாதார (W. H. O.) நிறுவனத்தின் எட்டாவது மாடியில் உட்கார்ந்தபடி ஆல்ப்ஸ் மலையின் அழகை ரசித்தோம் ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் பரபரப்பு இங்கில்லை. டிராம் வண்டிகளைப்போல மின் சாரத்தில் இயக்கப்படும் பஸ்கள் இங்கே ஓடுகின்றன.

கடிகாரம்!—இங்கு ஒரு வீட்டுத் தொழில். 50 மைல் தூரம் பரந்து கிடக்கும் ஜினீவா ஏரி ஒரு அற்புதம்.

‘டெலிசேர்’ மூலம் கீழேயிருந்து ஆல்ப்ஸ் மலையின் உச்சிக்குப் போனோம். எனக்குப் பயம்! எல்லாரும் கேலி செய்தார்கள்! பயங்கரமான அனுபவம். உச்சிக்குப் போனால் ஒரே பனிக்கட்டி மயம் பார்த்து அடியெடுத்து வையுங்கள் என்றார்கள். எங்கே பள்ளம் இருக்கிறது என்று அப்பனிமலையில் தெரியாதாம். உச்சியில் நின்றபோது என்னையே நான் மறந்தேன்!

ஃ ஃ ஃ

ரோமாபுரி—சென்னையிலுள்ள ஒரு நண்பரின் உதவியால் எங்களுக்கு வசதியான ஓட்டல் கிடைத்தது. ரோமாபுரிக்குள் நுழையும்போது பல நாடுகளில் நம்மூர் போல ஓடுகள் போடப்பட்டிருந்ததைக் கண்டேன். இதை கிரேக்க நாட்டின் தலைநகரமான ஏதென்சிலும் பார்த்தேன். ஒரு காலத்தில் தமிழ் நாட்டு முத்தும் ஆடைகளும் கிரேக்கத்துக்கும் ரோமுக்கும் சென்றதுபோல நம்மூர் ஓடுகளும் போயிருக்குமோ என்று கருதினேன்! ஆகா, எங்கு

நோக்கினும் சிலைகள்! சிலைகள்! சிலைகள்தான்!! 'காலோஷியம்' என்னும் ஒப்பற்ற விளையாட்டுக் கூடம்—போப்பாண்டவர் வாழும் 'வாடிகன் சிடி'—அங்குள்ள அழகான சிலைகள்—அப்பப்பா, கத்தோலிக்கர்கள் தொழும் வாடிகன் உண்மையில் பிரமிப்பை உண்டு பண்ணியது. "எங்கே ஜூலியஸ் சீசர் குத்துப் பட்டான்? அந்த இடத்தைப் பார்க்க வேண்டுமே." என்றேன். ரோமாபுரியின் மாவீரர்கள் உலாவிய அந்த ஒப்பற்ற இடம் என் கற்பனையைப் போலில்லாமல் சாதாரணமாகயிருந்தது.

ஏதென்ஸ்—கிரேக்கப் பெருநாட்டின் தலைநகர். நான் படித்ததையெல்லாம் மனத்தில் நினைத்துக் கொண்டு அம் மாநகருக்குள் நுழைந்தபோது, அழகிழந்த ஒரு விதவை எதிர்ப்பட்டால் எப்படியிருக்குமோ அந்த உணர்வே ஏற்பட்டது! எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓட்டலில் போய்த் தங்கினோம். சாக்ரடிசும், பிளேட்டோவும், அரிஸ்டாடிலும், அலெக்சாண்டரும், பித்தகோரசும், ஆர்க்கிமிடிசும் வாழ்ந்த மண்ணை மிதித்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டேன்.

"ஆக்ரோபாலிஸ்"—ஆகா. பழைய கிரேக்கத்தின் பெருமை கூறும் கட்டடச் சின்னமாகும்! சலவைக்கல் கொண்டு 5,000 ஆண்டுகளுக்கு முன்பு அந்த மலையுச்சியில் எப்படித்தான் கட்டினார்களோ! சுற்றுலா வாசிகளைக் கவருவதற்காக, அப்பழம் பெரும் சின்னத்திக்கு, கிரேக்க அரசு செய்திருந்த ஒளி அமைப்பு, பிரமாதம். கண்ணைப் பறிக்கும் அக்காட்சியைக் கண்டவாறே ஏதன்சின் வீதிகளில் நடந்தோம். வான சாத்திரத்தை உலகுக்குச் சொன்ன அந்த எழிலூரில் கணிதம், வானவியல் சொல்லித் தரும் 'அகாடமி' ஒன்று இருக்கிறது. கிரேக்கப் பல்கலைக் கழகம் ஆடம்பரமில்லாமல் காட்சியளிக்கிறது. இதற்கு அருகில் உள்ள ஒரு தெரு மூலையில்தான் தினசரி பிளேடோ தன் சீடர்களுடன் கலந்துரையாடுவார் என்றார்கள்.

ஃ ஃ ஃ

பீருத்—லெபனான் நாட்டின் தலைநகரம். இஸ்லாமியர்களின் தேசம். அங்கு நுழைந்த போது கருஞ்சட்டையும் கருங்கால்சட்டையும் அணிந்த பலர் வீதிகளில் போவதைப் பார்த்தேன். யூதர்களின் நாடான இஸ்ரேலை அழித்திடும் ஆவேசங் கொண்ட 'தற்கொலைப் படை' என்று சொன்னார்கள். மனிதருக்குள் ஏனிந்தப் பகை உணர்வு என்று எண்ணினேன்.

தலைநகரிலிருந்து இருபது மைல்களுக்கப்பால், இயற்கை வடித்து வைத்திருக்கும் ஓர் அற்புதத்தைக் காண அழைத்துச் சென்றார்கள். பெரிய குகை—சுமார் 30 மைலிருக்கும்! மழைநீர் சொட்டிச் சொட்டி பளிங்காலான சிறுசிறு குன்றுகள்—ஆகா, இயற்கையின் விந்தையே விந்தை.

குவாய்ட், சேர்ந்தோம்! ஒரே மண் புழுதி. உலகிலேயே வளமுள்ள ஒரு சிறு நாடு. கைவைத்துத் தோண்டினால் பெட்ரோல் கிடைக்குமாம். இப்படி மண் புழுதி அடிக்கும் இந்த ஊரில் எப்படி மக்கள் இருக்கிறார்கள், என்று எண்ணினேன். பணக்கார நாடு இது! 'இந்த ஊரை மின்சார மயமாக்க நமது சென்னை ஈசன் இன்சினீயரிங்தான் 'காண்டிராக்ட்' எடுத்து வேலை செய்கிறது என்றார்கள். ஒரு தமிழனால் உலகச் சீமான் பூமி, உயர்வு பெறுகிறது என்றதும், எப்படிப் பணி புரிகிறார்கள் நம்மவர்கள் என்று பார்க்கிற ஆசை ஏற்பட்டது. இருபது மைல் காரில் சென்றோம்! ஒரே மண் புழுதி-பாலைவனத்திலிருப்பது போல. இருபது முப்பது தமிழர்கள். இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள், அந்தப் பாலைவன மண் வாரியையும் பொருட்படுத்தாமல், மின்சாரக் கம்பங்களை நட்டுக் கம்பிகளை இழுத்து, குவாய்ட் தீவை ஒளிமயமாக்கிக் கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டதும் அவர்களுக்கு ஒரே ஆனந்தம். அவர்களுக்கென்று அமைக்கப் பட்டிருந்த சிறு கூடாரத்துக்கு அழைத்துப் போய்த் தேநீர் கொடுத்தார்கள். குவாய்ட்டில், குடிக்க, சொட்டுத் தண்ணீர்கூடக் கிடைப்பது கஷ்டமாம். அதைப்போக்க ஐ. நா. சபையின் ஆதரவோடு, கடல் நீரைக் குடி நீராக்கும், பெரிய இயந்திரத்தைப் பொருத்தியிருக்கிறார்கள். நண்பர் நடராசன் என்பார் "கார்ச் சந்தை பார்க்கிறீர்களா?" என்றார். புத்தம் புது காடிலாக், செவர்லே, போர்டு கார்கள் அப்படியப்படியே கிடந்தன. பக்கத்திலுள்ள அரபு நாடுகளிலிருந்து இவைகளை ஏலம் எடுத்துப் போவார்களாம். "இவ்வளவு புதிதாயிருக்கிறதே!" என்றேன். நண்பர் சிரித்தார். ரோட்டில் ஓடும்போது ஏதாவது சிறு 'ரிப்பேர்' காருக்கு ஏற்பட்டு விட்டாலும், அங்கேயே அதை விட்டுவிட்டு, கம்பெனிக்குப் போன் செய்து புதுக் காரில் போவார்களாம், குவாய்ட் வாசிகள்! அவ்வளவு செல்வம்! எல்லாம் பெட்ரோலின் மகத்துவம்!! அங்கு எல்லாம் இலவசம்—ஆனால் வரி கிடையாது. மன்னர் மாளிகையைப் பார்த்தேன். ஏராளமான கடைகள். உலகச் சந்தையே அங்கு இருக்கிறது. அதை வியந்தபடியே பம்பாய் செல்லும் ஏர் இந்தியா விமானத்துக்கு வந்தோம்!! ●

---

உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள் வெட்டுக்கிளிகள்போல் இங்குமங்கும் தாவுவர்—மரம் பழுத்தால் வௌவாலாவர். புயலடிக்குமென்று தெரிந்தால், சந்து பொந்துக்களைத் தேடிக்கொள்வர்— கஷ்டநஷ்டம் வருமெனத் தெரிந்தால், காவடி தூக்குவர் உடனுக்குடனே கணக்கைப் பார்த்களிப்படைவர்.

ஃ ஃ ஃ

மருத்துவத் துறையும் கல்வித் துறையும் முழுக்க முழுக்க மாநில அரசுப் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், மத்திய அரசைக் கேட்டுச் செயலாற்றும் நிலையே காணப்படுகிறது. நாடு ஆரோக்கியமாக இருக்கவே அத்துறைகள் மாநில அரசின் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

— அறிஞர் அண்ணா

# விஞ்ஞான மேடை

## கொழுப்பு நிறைய உட்கொண்டால் உங்கள் காது மந்தமாகும்!

டாக்டர் சாமுவேல் ரோசன் நியூயார்க் நகரின் மவுன்ட் சீனாய் மருத்துவ மனையில் பணியாற்றுபவர்; புகழ்பெற்ற காது மருத்துவ வல்லுநர். உங்களுக்குக் காது நன்றாகக் கேட்குமா என்பது நீங்கள் உட்கொள்ளும் உணவைப் பொறுத்தது என்கிறார் அவர்.

உண்ணும் உணவில் அளவுக்கு மிஞ்சிய கொழுப்புச் சத்து இருந்தால் காது மந்தமாவதும் இருதய நோய் ஏற்படுவதும் திண்ணம் என்று டாக்டர் ரோசன் ஆராய்ந்து பார்த்துவிட்டுக் கூறுகிறார். சூடான் என்ற இடத்தில் வாழும் மாபன் என்ற பழங்குடி மக்களிடையிலும் பின்லாந்தில் இரண்டு மருத்துவ மனைகளிலும் தாம் நடத்திய ஆராய்ச்சி இந்த உண்மையைப் புலப்படுத்துவதாக அவர் தெரிவிக்கிறார்.

மாபன் மக்களுக்குக் காது மிக நன்றாகக் கேட்கிறதாம்; அவர்களுள் வயது சென்றவர்களிடத்திலும் இரத்த அழுத்தம் குறைவாகவே உள்ளதாம். அவர்களுக்கு இருதய நோய் வருவதில்லை; உடம்பு தடித்துப் பருப்பதும் இல்லை. அவர்கள் உணவிலே கொழுப்புச் சத்து அதிகம் இல்லை என்று கண்டார் டாக்டர் ரோசன்.

அடுத்தபடி, டாக்டர் ரோசன் பின்லாந்து மருத்துவமனை ஒன்றில் சில நோயாளிகளுக்குக் கொழுப்புச் சத்துகுறைவான உணவைக் கொடுக்கச் செய்தார். அவர்களுடைய செவிப்புலன் மேம்பட்டது. பின்னர் இவர்களுக்குக் கொழுப்புச் சத்துமிக்க உணவை வழங்கி, மற்றொரு மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளின் உணவில் கொழுப்புச் சத்தைக் குறைத்தார். முதல் மருத்துவமனை நோயாளிகளின் காது மந்தமாக, இரண்டாவது மருத்துவமனை நோயாளிகளின் காது நன்கு கேட்டது.

ஃ ஃ ஃ

## நுரையீரல் புற்றுநோய்க்கு சிகரட் புகைத்தல் காரணம்

பென்ஸோபைரீன்—சிகரட் பிடிக்கையில் அப்புகையிலையில் உள்ள நஞ்சு இது. வீடுகளில் கரியடுப்பும் விறகு அடுப்பும் நன்றாக இல்லை என்றால் வீடு முழுவதும் புகை மண்டிவிடுகிறதல்லவா? அந்தப் புகையிலும் மோட்டார்கார் இஞ்சின்விடும் புகையிலும்கூட பென்ஸோபைரீன் நஞ்சு இருக்கிறது. அமெரிக்க அரசிடம் காற்றினைக் கெடுக்கும் நஞ்சுகள் பற்றிய பட்டியல் ஒன்று உள்ளது. அந்தப் பட்டியலிலே பென்ஸோபைரீன் விரைவில் இடம் பெறவிருக்கிறது. இது ஆபத்தான ஒரு நஞ்சு என்று அமெரிக்க இயற்கைச் சூழ்நிலைப் பாதுகாப்பு நிலையம் அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கத் தேசிய விஞ்ஞானக் கழகம் பரிந்துரைத்துள்ளது. நுரையீரல் புற்றுநோய்க்கு பென்ஸோபைரீனும் ஒரு காரணம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். நகர்ப்புறங்களிலும் நகரைச் சுற்றியுள்ள இணை நகர்புறங்களிலும் காற்றிலே பென்ஸோபைரின் அளவு பாதி குறைந்து விட்டால் நுரையீரல் நோய் ஐந்தில் ஒரு பங்கு குறைந்துவிடும் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஃ ஃ ஃ

## உயரமாக வளர உப்பு சாப்பிடுங்கள்

உடல் வளர, ஐயோடின் உப்பு சாப்பிடுங்கள். ஜெர்மன் நிபுணர்கள், இந்தயோசனையை கூறியுள்ளனர்.

சிலருக்கு குரல்வளைச் சுரப்பி வீக்கம் ஏற்பட்டிருந்தால், அவர்கள் உணவில் ஐயோடின் உப்பு குறைந்த அளவில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். பொதுவாக கடலோரமாக குடியிருக்கிற மக்களுக்கு இவ்வித குறைபாடு ஏற்படுவதில்லை.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் தென் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டில் ஆயிரக்கணக்கான மக்கள் குரல்வளைச் சுரப்பி வீக்க நோயினால் அவதிப்படுகிறார்கள். இவர்கள் ஆகாரத்தில் 36 மைக்ரோகிராம் ஐயோடின் உப்பு மட்டுமே காணப்படுகிறது. மக்களின் தேவையில் இது பாதிதான், இமயமலைப் பகுதிகளிலும், வேறு பல இடங்களிலும் மனிதனிது வளர்ச்சி குன்றி குட்டையாகவும், குரல்வளைச் சுரப்பி வீக்கத்துடனும் இருப்பதற்குக் காரணமும், போதுமான ஐயோடின் உப்பு உட்கொள்ளாததேயாகும். தினசரி உணவில் ஐயோடின் உப்பை அவசியம் சேர்க்க வேண்டும் என்று ஜெர்மன் மருத்துவ பீட்டர்ஸ் கிரிபா வற்புறுத்தியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

## பித்தப் பையின் கற்களை கரைக்க அதிசய மருந்து

பித்தப் பையில் 'கல்' உருவானால், மனிதன் வலியினால் துடிதுடித்துப் போவான். இவ்வித பித்தப் பை கற்களை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்து மனிதனுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய புதிய கலவை ஒன்றை ஜப்பான் மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர் ஜப்பான் அறுவை கிசிச்சை நிபுணர்கள் மாநாட்டில் கியூஷு பல்கலைக் கழக மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் இந்தக் கண்டுபிடிப்பை அறிவித்தனர்.

கொழுப்பு காரணமாகவும், பித்தப் பையில் கற்கள் உருவாவது உண்டு. இவ்வித கற்களை அகற்றுவதற்கு, இதுவரை எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. ஜப்பான் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ள புதிய கலவையை பயன்படுத்தினால், நல்ல பலன் கிட்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர் இந்த கலவைத் தண்ணீரில் கரையக்கூடியது. பித்தநீர் குழாய் வழியாக இப் புதிய மருந்தைச் செலுத்தினால், கற்கள் கரைந்து விடும்.




## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடைமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய ஒன்றுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.